# தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1:2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| இலங்கை கணக்கீட்டு நியமத்துடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| நியமம் 18 | (i) 05 ஆண்டுகளுக்கு மேலான காலப்பகுதியின் போது பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி, புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்பட்டோ அல்லது நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டோ இருக்கவில்லை. |
| | (ii) பெறுமதி முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட எனினும், தொடர்ந்து பயன்படுத்தப்படும் கொள்வனவுப் பெறுமதி ரூபா 13.38 மில்லியன் தொகையான சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) சொத்துக்களின் பயன்பாட்டு வாழ்க்கைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு கணனி மற்றும் கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் இயந்திரங்களும் இயந்திர உபகரணங்களும் மோட்டார் வாகனங்கள், நூலகப் புத்தகங்கள் போன்ற நிலையான சொத்துக்கள் பெறுமானத்தேய்விடப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள், தேறாத காசோலைகள், காசுக் கட்டளைகள், வங்கி நேரடி செலவுகள், வங்கி நேரடி வரவுகள், மதிப்பிழந்த காசோலைகள், காசுப் புத்தகங்களில் திருத்தப்பட வேண்டிய மீதி, வங்கிக் கட்டணங்கள் போன்ற 08 விடயங்களுக்குரிய ரூபா 424,781 கூட்டுத்தொகையான தீர்க்கப்படாத மீதிகள் 05 ஆண்டுகளுக்கு மேலான காலமாக தொடர்ச்சியாக 05 வங்கிக் கணக்குகளுக்குரிய வங்கிக் கணக்கிணக்கத்தில் காண்பிக்கப்பட்டிருந்தன. அவற்றை இணக்கம் செய்து தீர்க்கப்படுவதற்கும் சரியாக கணக்கிடப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விடுதி அறைகளுக்கும் விரிவுரை மண்டபத்திற்கும் 2001 முதல் 2010 வரையான காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 106,025 கூட்டுத்தொகையான திரைச்சேலை, கட்டில் விரிப்புக்கள், மெத்தைகள் போன்ற பாவனைப்பொருட்கள் நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 01 முதல் 05 ஆண்டுகள் வரையான காலமாக நிலுவையாகக் காணப்பட்ட பாடநெறிக் கட்டணங்கள், வெளிவாரி சேவைக் கட்டணங்கள், அச்சீட்டுக் கட்டணங்கள், கட்டிட வாடகை மற்றும் நீர்க் கட்டணங்களின் ரூபா 1,312,326 கூட்டுத்தொகையான பெறவேண்டிய 05 மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் திரண்டிருந்த ரூபா 13,446,550 தொகையான கிடைக்க வேண்டிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) மீதி உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் இருந்து அறவிடப்படாதிருந்ததுடன் அக் கணக்கு மீதிகள் 05 ஆண்டு காலத்திற்கு மேலான காலமாக இணக்கம் செய்யப்படாது கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் 04 கணக்குகளில் திரண்டிருந்த ரூபா 268,508 தொகையான கடன்கொடுத்தோர் மீதியை தீர்த்துவைப்பதற்கு 2011 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங் களுடன் தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை | |
| XIX ஆம் அத்தியாயத்தின் 5.3 ஆம் பிரிவு | பட்டியல்படுத்தப்பட்ட அரச விடுதியொன்றில் குடியிருப்பதற்காக ஊழியர்களின் சம்பளத்தில் 10% அல்லது சிக்கன வாடகை ஒன்றை அறவிடுவதற்குப் பதிலாக சிறிய பெயரளவிலான வாடகை நிறுவகத்தின் உத்தியோகபூர்வ விடுதிகளில் குடியிருக்கும் ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது. |
| (ii) VII ஆம் அத்தியாயத்தின் 12 ஆம் பிரிவு மற்றும் 1997 பெப்ரவரி 03 ஆம் திகதிய 06/97 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 2011திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2 ஆண்டுகளுக்கு மேலான காலமாக பணிப்பாளர் (கல்வி மற்றும் அபிவிருத்தி) பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக ஒரு விரிவுரையாளருக்கு முறையற்ற விதத்தில் ரூபா 104,575 தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| நி.பி. 756 | ரூபா 64,056,244 பெறுமதியான நிலையான |

சொத்துக்கள் மீளாய்வு செய்யப்பட்டு மெய்மையாய்வு சபை அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் தொழிற்பாடுகளின் நிதி விளைவு ரூபா 9,912,838 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 7,300,759 ஆனமையால் நிதி விளைவுகள் மேலும் ரூபா 2,612,079 தொகையால் வீழ்ச்சியுற்றிருந்தது. ஊழியர் சம்பளமும் படிகளும் மற்றும் உடன்படிக்கையிடப்பட்ட சேவைக் கொடுப்பனவு அதிகரிப்பு இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 செலவின அதிகரிப்பும் தொடர்ச்சியான பற்றாக்குறையும்

2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை நிறுவகத்தின் செலவின அதிகரிப்பு மற்றும் அதற்கு ஒப்பாக வருமானம் குறைவடைந்தமையால் தொடர்ந்து நிலவிய பற்றாக்குறை தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| வருமான செலவினக் கணக்கின்படி பற்றாக்குறை | (9.91) | (7.30) | (6.17) | (4.14) | (7.61) | (8.88) | (44.01 ) |
| கழி: பெறுமானத் தேய்வு | 11.19 | 10.29 | 9.36 | 8.63 | 6.58 | 7.72 | 53.77 |
| பெறுமானத் தேய்வு சீராக்கப்பட முன்னர் மிகை/ (பற்றாக்குறை) | 1.28 | 2.99 | 3.19 | 4.49 | (1.03) | (1.16) | 9.76 |
| கழி. மீண்டுவரும் மானியங்கள் | 22.74 | 22.39 | 21.47 | 19.68 | 13.65 | 8.65 | 108.58 |
| மீண்டுவரும் மானியங்களும் பெறுமானத் தேய்வும் சீராக்கப்பட முன்னர் பற்றாக்குறை | (21.46) | (19.40) | (18. 28) | (15.19) | (14.68) | (9.81) | (98.82) |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2006 இலிருந்து 2011 வரை 06 ஆண்டுகளில் நிறுவனம் உழைத்த வருமானம் ரூபா 98.82 மில்லியனால் மிகைத்து செலவு அதிகரித்திருந்தது.

(ii) 2006 இலிருந்து 2011 வரையான 06 ஆண்டு காலப்பகுதியின் போது அரசாங்க மானியம் இன்றி நிறுவகம் ரூபா 98.2 தொகையான திரண்ட பற்றாக்குறையைப் பெற்றிருந்த போதிலும் அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 108.58 தொகையான மானியத்தினால் அது தவிர்க்கப்பட்டிருந்தது. ஆகவே நிறுவகத்தின் தொடர்ந்து நிலைத்திருப்பதின் நிச்சயமற்ற நிலைமை கணக்காய்வின் போது தவிர்க்கப்பட முடியாதிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2001 இன் 1 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவன (உருவாக்கல்) அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனம் உருவாக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்கு மீளாய்வாண்டின் போதும் முடியாதிருந்தது.

(i) கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சிகளை மேம்படுத்துவதற்கு.

(ii) கூட்டுறவு அபிவிருத்திக்குரிய தரவுகளை சேகரித்தலுக்கான வள நிலையமொன்றாக செயற்படலும், சேகரிக்கப்பட்ட தரவுகளை வெளியிடுவதன் மூலம் சுழற்சி செய்தல் மற்றும் பகிரப்படுவதற்கு

(iii) முகாமைத்துவ நிபுணத்துவம் தேவைப்படும் கூட்டுறவு முயற்சிகளை பொறுப்பேற்று முகாமை செய்வதற்கு மற்றும்

(iv) கூட்டுறவு முயற்சிகளுக்கு தொழில்சார் அறிவுரைகள் வழங்குதற்கு.

(ஆ) நிறுவகத்தால் நடாத்தப்பட்ட பாடநெறிகளின் முன்னேற்றம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| பாட நெறிகள் | 2011 எதிர்பார்க்கப்பட்ட | | 2011 உள்ளவாறான | | 2010 உள்ளவாறான | |
|---|---|---|---|---|---|---|
| | பாடநெறிகளின் எண்ணிக்கை | பாட நெறிகளைப் பின்பற்றியோர்களின் எண்ணிக்கை | பாட நெறிகளின் எண்ணிக்கை | பாடநெறிகளைப் பின்பற்றுவோரின் எண்ணிக்கை | பாட நெறிகளின் எண்ணிக்கை | பாடநெறிகளைப் பின்பற்றுவோரின் எண்ணிக்கை |
| அன்றாட பயிற்சிப் பாடநெறிகள் | 02 | 83 | 03 | 110 | 02 | 97 |
| உயர் டிப்ளோமா பாடநெறி | 14 | 280 | 16 | 297 | 10 | 210 |
| சான்றிதழ் பாடநெறி | 06 | 125 | 05 | 81 | 06 | 135 |
| குறுங்கால முகாமைத்துவ அபிவிருத்தி பாடநெறி | 27 | 735 | 12 | 351 | 10 | 473 |
| வெளி நிறுவனங்களின் வேண்டுகை மீது நடாத்தப்பட்ட பாடநெறிகள் | - | - | 16 | 682 | 34 | 1,347 |
| கூட்டுறவு துறையின் முன்னேற்றத்திற்காக இலவசமாக நடாத்தப்பட்ட பாடநெறிகள் | - | - | 08 | 380 | 14 | 498 |
| வெளிவாரி பட்டம் மற்றும் தொழிற்துறை கணக்கீட்டு பரீட்சைக்கான துணை நிகழ்ச்சித்திட்டம் | - | - | 04 | 57 | - | - |
| மொத்தம் | 49 | 1,223 | 64 | 1,958 | 76 | 2,760 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் போது குறுங்கால முகாமைத்துவ அபிவிருத்தி பாடநெறிகளை நடாத்தும் செயற்திறன் 44% ஆகக் காணப்பட்டதுடன் பாடநெறிகள் பின்பற்றியவர்கள் இலக்கிடப்பட்ட எண்ணிக்கையில் 48% மாத்திரமாகும்.

(ii) மீளாய்வாண்டில் கூட்டுறவுத் துறையின் வளர்ச்சியை நோக்கி இலவசமாக நடாத்தப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை 08 ஆக இருந்தது. அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 43% ஆன குறைவாகும்.

(iii) மீளாய்வாண்டில் தராதரப்பத்திர பாடநெறிகள் நடாத்தப்பட்டமை மற்றும் பாடநெறியில் பங்குபற்றுபவர்களை பங்குபற்றச் செய்தல்

என்பவற்றின் செயற்திறன் முறையே 83% ஆகவும் 65% ஆகவும் காணப்பட்டது.

(iv) வெளி நிறுவகங்களின் வேண்டுகோளின் பேரில் பாடநெறிகளை நடாத்துவது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது 53% அளவில் குறைவாகக் காணப்பட்டது.

(v) வெளிவாரி பட்டம் மற்றும் தொழிற்துறை கணக்கீட்டுப் பரீட்சைக்காக துணை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் இலக்குகள் தீர்மானிக்கப்பட்டிருக்க வில்லை. நடாத்தப்பட்ட 04 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 57 பேர் மாத்திரமே கலந்துகொண்டிருந்தனர்.

(ஆ) மீளாய்வாண்டில் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பாடநெறிகளிலிருந்து கிடைத்த வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| பாடநெறி | 2011 இலக்கிடப்பட்டவை | 2011 உள்ளபடியானவை | 2010 உள்ளவாறானவை |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிரந்தர பயிற்சிப் பாடநெறி | 559,860 | 429,598 | 551,736 |
| உயர் டிப்ளோமா பாடநெறி | 2,840,688 | 2,051,083 | 2.346,221 |
| தராதரப்பத்திர பாடநெறி | 1,607,833 | 1,240,529 | 1,314,390 |
| குறுங்கால முகாமைத்துவ அபிவிருத்தி பாடநெறி | 2,470,000 | 3,568,596 | 2,651,412 |
| தொழில்சார் கணக்கீட்டு பரீட்சைக்காக துணை நிகழ்ச்சித்திட்டங்கள் | - | 197,700 | - |
| வெளிவாரிப் பரீட்சைக்காக துணை நிகழ்ச்சித்திட்டங்கள் | - | 193,750 | - |
| | 7,478,381 | 7,681,256 | 6,863,759 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 14 உயர் டிப்ளோமா பாடநெறிகள் மற்றும் அதற்காக பாடநெறியைத் தொடர்பவர்கள் 280 ஆக எதிர்பார்த்த இலக்காக குறிப்பிட்டு எதிர்பார்த்த வருமானம் ரூபா 2,840,688 ஆகக் காண்பிக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் இலக்கிடப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை 02 ஆலும் பாடநெறியைத் தொடர்பவர்களின் எண்ணிக்கை 17 ஆலும்

அதிகரித்திருந்த போதிலும் உள்ளபடியான வருமானம் இலக்கிடப்பட்ட வருமானத்தைப் பார்க்கிலும் ரூபா 789,605 ஆல் குறைவடைந்திருந்தது.

(ii) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது மொத்த பாடநெறி வருமானம் ரூபா 817,497 ஆல் அதாவது 12% ஆல் அதிகரித்திருந்தது.

**3.2 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கேட்போர் கூட நிர்மாணிப்பு நடவடிக்கைகளில் நிலவிய நீண்டகால தாமதம் காரணமாக திறைசேரியில் இருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 27,652,257 தொகையான மூலதன மானியம் பயன்படுத்தப்படாது வங்கி நடைமுறைக் கணக்கில் 02 ஆண்டு காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) கூட்டுறவுத் துறையில் தேசிய வினைதிறன் செயற்பாட்டுப் போட்டி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தலிலான காலதாமதம் காரணமாக அரச வங்கி ஒன்றிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1,202,148 தொகையான மானியத்தைப் பயன்படுத்தாது வங்கி நடைமுறைக் கணக்கில் 02 வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

**3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்**

பல் நோக்கக் கட்டிடத்தின் கீழ் மாடியின் வருடாந்த வாடகை மதிப்பீடு ரூபா 390,000 ஆன போதிலும் இது ரூபா 195,000 தொகையான வருடாந்த வாடகையில் 2010 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 2015 மார்ச் 31 ஆம் திகதி வரை 05 ஆண்டுகளுக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு முறையற்ற வகையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வாடகை வருமானமாக ரூபா 341,250 தொகை நிறுவகத்திற்குக் கிடைக்கப்பெறாது போயிற்று.

**3.4 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

அச்சீட்டுப் பிரிவின் 3 இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது 10 வருடங்களுக்கு மேலான காலமாக பயன்பாடின்றிக் காணப்பட்டன.

## 3.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

### (அ) கேட்போர் கூடத்தின் நிர்மாணிப்பு

கேட்போர் கூடத்தின் நிர்மாண வேலை ரூபா 44.5 மில்லியன் கிரய மதிப்பீட்டில் தனியார் ஒப்பந்தக் கம்பனியொன்றிற்கு 2001 ஆகஸ்ட் மாதத்தின் போது ஒப்படைக்கப்பட்டிருந்தது. நிர்மாண வேலைகள் 2003 ஏப்ரல் மாதமளவில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும், கூரையின் நிர்மாண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் 2005 பெப்ரவரி 14 ஆம் திகதி அது உடைந்து விழுந்ததால் நிர்மாண வேலைகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், கூரையின் முழுமையான நிர்மாணிப்பு உட்பட எஞ்சிய வேலைப் பூர்த்தி ரூபா 113 மில்லியன் தொகையான புதிய மதிப்பீட்டிற்கு பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய உசாத்துணை பணியகத்திற்கு 2009 ஆம் ஆண்டின் போது ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2012 யூலை 30 இல் உள்ளவாறும் நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கூரை உடைந்து விழுந்த காரணத்தால் நேர்ந்த நட்டம் தொடர்பாக நிர்மாணப் பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தி நிறுவகத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் அறிக்கையும் சீஐரீ/4/4/8/2 ஆம் இலக்க 2012 மே 31 ஆம் திகதிய வரிசை அமைச்சுச் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம், கூரை உடைந்து விழுந்தமையால் நிறுவகத்திற்கு ஏற்பட்டுள்ள ரூபா 3,907,904 தொகையான நட்டம், நிர்மாணிப்புகளுக்காக மதியுரை சேவைகள் வழங்கிய மதியுரையாளர்களிடம் இருந்தும் நிர்மாணிப்புக் கம்பனியிடம் இருந்தும் (50% படி) அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்குக் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் 2012 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறும் இந்த நட்டத்தை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மதியுரை சேவையை வழங்கிய மதியுரையாளர் அரச சேவையில் இருக்கையில் இந்த நிர்மாணிப்பிற்காக அனுமதியின்றி தனிப்பட்ட ரீதியில் மதியுரை சேவைகளை வழங்கி ரூபா 2.15 மில்லியன் தொகையான கட்டணங்களை பெற்றுக்கொண்டமை தொடர்பாக ஒழுக்காற்று

நடவடிக்கைகள் எடுப்பதற்கு உரிய நிறுவகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கேட்போர் கூட நிர்மாணிப்புகள் மீள ஆரம்பிக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு வருகையில் நிர்மாணிப்புத் திட்டம் திருத்தப்பட்டமையால் 2012 மே மாதத்தின் போது நிர்மாணிப்பு வேலைகள் மீள இடைநிறுத்தப்பட்டிருந்தன. 2012 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் புதிய நிர்மாணிப்புத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 97.5 மில்லியன் தொகையான கிரய மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்காக மாத்திரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(iv) நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட 2001 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையான 11 வருட நீண்ட கால தாமதமும் நிர்மாணிப்புத் திட்டத்தின் திருத்தமும் காரணமாக ரூபா 44.5 மில்லியன் தொகையான கிரயத்தில் பூர்த்திசெய்யப்படக் கூடிய நிர்மாணிப்புகளின் மொத்தக் கிரயம் ரூபா 255.0 மில்லியன் வரை அதாவது ரூபா 210.5 மில்லியன் தொகையால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) சேவை வசதிகள் கொள்வனவு**

மீளாய்வாண்டின் போது பாதுகாப்பு, சுத்திகரிப்பு, சிற்றுண்டிச் சாலைகள் போன்ற சேவைகளை வழங்குவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2011 ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு, சுத்திகரிப்பு, சிற்றுண்டிச் சாலைகள் போன்ற சேவைகளை வழங்கும் ஒப்பந்தத்திற்காக கேட்பு மனுக்கள் கோரப்பட்டு கேள்விதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கையில் இதனைக் கருத்திற்கொள்ளாது கேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்படாத தனியார் கம்பனியிடம் இருந்து முறையற்றவிதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட விலைகளுகளின் படி மேற்குறிப்பிடப்பட்ட 03 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டதன் காரணமாக நிறுவகத்திற்கு ஒரு வருடத்திற்கு ரூபா 1,536,440 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ii) மேற்குறிப்பிடப்பட்ட முறையற்ற நிலைமை காணப்பட்டிருந்தும் 2012 ஆம் ஆண்டிற்காகவும் விலை மனுக்கள் கோரப்படாது ஒப்பந்த உடன்படிக்கைக் காலம் நீடிக்கப்பட்டு அத்தனியார் நிறுவகத்திற்கும் 03 ஒப்பந்தங்கள் மீள வழங்கப்பட்டிருந்தன.

## 3.6 ஆளணி நிர்வாகம்

நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை 59 ஆக இருந்ததுடன், உள்ளபடியான பதவியணி எண்ணிக்கை 35 ஆனமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 24 ஆக இருந்தது. இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக நி.பி 71 இன் பிரகாரம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு வருடத்திற்குமான நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2012 யூலை 26 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 4.2 கூட்டுத்திட்டம்

2012 – 2016 ஆம் ஆண்டுகளை உள்ளடக்கும் வகையில் கூட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 உள்ளகக் கணக்காய்வு

நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 கொள்வனவுத் திட்டம்

அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டல் கைநூலின் 4.2 வழிகாட்டலின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிறுவனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) நிலையான சொத்துக்கள்

(ஆ) நிலுவை வருமானம்

(இ) ஒப்பந்த நிர்வாகம்

(ஈ) மனிதவள முகாமைத்துவம்